





கோப்புப் படம்




## ஜிஞ்சாங் செலாத்தான் தம்பாஹானில்

# கணக்கெடுப்பில் பல முறைகேடுகள்

## குலுக்கல் முறையை நிறுத்த கோரிக்கை

**கோலாலம்பூர், செப். 25- ஜிஞ்சாங் செலாத்தான் தம்பாஹான் குடியிருப்பு வாசிகளுக்கு மாற்று வீடுகளை வழுங்க அதன் மேம்பாட்டாளர் நடத்தும் குலுக்கல் முறையை மாநகர மன்றம் நிறுத்த வேண்டும் என்று அந்த வட்டார மக்களின் குடியிருப்போர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.**

இது பல்வேறு தவறுகளுக்கு வித்திடலாம் என்பதால் இந்த குலுக்கல் முறையை நிறுத்துமாறு அந்த வட்டார குடியிருப்பு சங்கத்தின் செயலாளர் அமீர் கான் பரகத்அலி கேட்டுக் கொண்டார்.

### பாதிக்கப்பட்டவர்கள் யார்?

இந்த குடியிருப்பு பகுதியில் உண்மையாக பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதில் அடையாளம் காண்பதில் பல்வேறு தவறுகள் நடந்துள்ளன. இன்னும் சொல்லப் போனால் மாற்றுவீடுகளை பெற தேர்வு பெற்ற பலர் தகுதியானவர் கள்தானா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அந்த இடத்தில் தற்காலிகமாக குடியிருந்ததற்கான டிஓஎல் சான்றிதழ் பெறாத சிலர் கூட மாநகர மன்றத்தில் அந்த மாற்றுவீடு பட்டியலில் இடம் பெற்றிருக்க, உண்மையிலேயே அங்கு தங்கியிருந்த பலரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன என்றார் அவர்.

மேலும் அங்கு தங்கியிருக்கின்ற குடியிருப்பு வாசிகள் பல்வேறு கோரிக்கைகளை விடுத்துள்ளனர்.




இன்னும் இந்த வீடுகள் கட்டப்படவில்லை. வீடுகளை முழுமையாக கட்டி மக்கள் குடியேறும் வகையில் அந்த வீடு களை தர வேண்டும். அதுவரை தாங்கள் அங்கேயே இருக்கப் போவதாக குடியுருப்பு வாசிகள் கூறி வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட வீடமைப்பு நிறுவனம் 2 சலுகைகளை குடியிருப்பு வாசிகளுக்கு வழங்கியிருக்கிறது. 1. அவர்களுக்கு வீடுகள் கிடைக்கும் வரை வேறு இடங்களுக்குச் சென்று அவர்கள் தங்கியிருக்க அதற்கான செலவுகளை அது ஏற்றுக் கொள்கிறது. அதே போல கட்டப்படும் 2 லட்சம் வெள்ளி விலையிலான வீடுகளை அங்கு உள்ளவர்களே வாங்குவதற்கு அது வாய்ப்பு தந்துள்ளது.

ஆனால் மாநகர மன்றம் செய்த கணக்கெடுப்பும் அது தயாரித்த பட்டியலிலும் ஏராளமான குளறு படிகள் உள்ளன என்று குடியிருப்போர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

ஒரே வீட்டைச் சேர்ந்த பலரின் பெயர்களில் வீடுகள் பதியப்பட்டிருக் கின்றன. மேலும் குயிடிருப்பு வாசி களில் சிலரே தேர்ந்தெடுக்கப் பட்டு அவர்களுக்கு மாற்று வீடு களை தர வீடமைப்பு நிறுவனம் முன்வந்துள்ளது என்று சங்கம் குற்றம் சாட்டுகிறது.

### சங்கத்திடம் பேசவில்லை

இதனிடையே உத்தாரா லேண்ட் செண்டிரியான் பெர்ஹாட் என்ற



அந்த மேம்பாட்டு நிறுவனம் சங்கத்தை கலந்தாலோசிக்க வில்லை. மாறாக தகுதி பெற்ற குடியிருப்பாளர்களை ஒரு பாரத்தில் கையெழுத்திடுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. அப்படி கையெழுத்திட மறுத்தால் அவர்களுக்கு மாற்று வீடுகள் அல்லது இழப்பீடு கிடையாது என்று கூறப்பட்டிருக்கிறது.

இதன் பின்னர் குலுக்கல் முறை நடைபெற்றிருக்கிறது. மேலும் பாதிக்கப்பட்ட அந்த குடியிருப்பு வாசிகளுக்கு தரப்படுகின்ற இழப்பீடு களும் கேள்விக்குறியானவை என்று அவர் சொன்னார்.

சங்கத்தின் இந்த புகார் குறித்து கருத்துரைத்த இந்த வீடமைப்பு நிறுவனத்தின் இயக்குநர் அனுவார் இட்ரிஸ் குடியிருப்பாளர்களிடையே பாகுபாடு காட்டப்படவில்லை. அனைவருமே தொடர்பு கொள்ளப்பட்டனர். அதுவும் மாநகர மன்றத்தால் கடிதங்கள் கொடுக்கப்பட்டவர்களை மட்டும் நாங்கள் தொடர்பு கொண்டோம். ஒரு குடியிருப்பு வாசி 1க்கும் மேற்பட்ட முறையில் இழப்பீடு பெற்றார் என்ற குற்றச்சாட்டை அவர் நிராகரித்தார்.

இம்மாத தொடக்கத்தில் சம்பந்தப்பட்ட குடியிருப்போர் சங்கம் 17 அம்சங்களை உள்ளடக்கி மாநகர் மன்றத்திடம் கோரிக்கை மனு ஒன்றை சமர்ப்பித்திருக்கிறது, மாநாகர் மன்றம் நடத்திய குடியிருப்போர் கணக்காய்வு ஒருதலைபட்சமானது என்று அந்த சங்கம் குற்றம் சாட்டியது.

### பலர் விடுபட்டுள்ளனர்

இதில் தனித்து வாழும் அல்லது மூத்த குடியிருப்பு வாசி கள் விடுபட்டுள்ளனர். எனவே கோலாலம்பூரின் புதிய மேயர் மைமுனா ஷாரிப் இந்த விவகாரத்தில் தலையிட்டு தங்களுக்கு உதவ வேண்டும் என அந்த சங்கம் கேட்டுக் கொண்டது.

மேலும் அங்குள்ள குடியிருப்பு வாசிகளின் முழுமையான பட்டியல் தங்களிடம் தரப்பட வேண்டும். குலுக்கலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று அந்த சங்கம் கேட்டுக் கொண்டது.